# எதம்பியுடல் (இ.எம்.பி)
# Ethambutol (EMB)
## Tamil




**காசநோயாளர் மருந்து உட்கொள்ளல் வழிகாட்டி**

**எதம்பியுடல் என்பது என்ன?**

எதம்பியுடல் (இ.எம்.பி.) என்பது காசநோய்க் கிருமிகளை ஒழிக்கும் ஒரு மருந்து. (அதற்காக வேறு மருந்துகளோடு சேர்த்து உட்கொள்ளப்படுவது).

காசநோய்க் கிருமிகள் மிகவும் வலுவானவை. அவற்றை ஒழிப்பது கடினம். காசநோய்க் கிருமிகளைக் கொல்வதற்கு, இந்த மருந்தை நீங்கள் இரண்டு மாதங்களுக்கு அல்லது இன்னும் அதிக காலத்துக்கு உட்கொள்ள வேண்டியிருக்கும். இந்த மருந்தை நீங்கள் திட்டவட்டமாக எத்தனை மாதங்கள் உட்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் மருத்துவரே தீர்மானிப்பார்.

**நான் இந்த மருந்தை எப்படி உட்கொள்ள வேண்டும்?**

- நீங்கள் இந்த மருந்தை ஒவ்வொரு நாளும் **அல்லது** உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியவாறு உட்கொள்வது மிகவும் முக்கியம்.
- **நீங்கள் மருந்து உட்கொள்வதை நிறுத்தினால், அதனை உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.**
- நீங்கள் ஒரு தடவை மருந்து உட்கொள்ளத் தவறினால், கூடிய சீக்கிரம் அதனை மீண்டும் உட்கொள்ளவும். ஆனால் ஒரே தடவையில் இரு தடவைகளுக்குரிய மருந்தை உட்கொள்ளலாகாது.
- நீங்கள் உணவுக்கு முன்னரோ பின்னரோ இந்த மருந்தை உட்கொள்ளலாம்.
- இந்த மருந்தை ஓர் உலர்ந்த குளிர்மையான இடத்தில் வைத்தெடுக்கவும்.
- நீங்கள் உட்கொள்ளும் அல்லது உட்கொள்ளப் போகும் வேறு மருந்துகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் தவறாது தெரிவிக்கவும்.

* உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியவாறு இந்த மருந்தை நீங்கள் நாளாந்தம் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் உட்கொள்ளலாம்.

* நீங்கள் கர்ப்பிணியாக அல்லது பாலூட்டும் தாயாக இருந்தால் இந்த மருந்தை உட்கொள்வதற்கு முன்னர் உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும்.

**நான் எத்தகைய பக்க விளைவுகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?**

- நீங்கள் எதம்பியுடல் மருந்தை உட்கொள்ளும் காலத்தில் உங்கள் மருத்துவர் உங்களைக் கண்காணிக்க வேண்டியுள்ளது.
- **பின்வரும் பக்க விளைவுகள் தோன்றுவது வழக்கம்:**
  - பசி இன்மை
  - வயிற்றுக் குழப்பம்
  - தோல் வியாதி
- **பின்வருபவை இன்னும் கடுமையான பக்க விளைவுகள். அவற்றுள் எது தோன்றினாலும் மருந்து உட்கொள்வதை நிறுத்தி, உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும்.**
  - உங்கள் ஒருகண் அல்லது இருகண் பார்வைத் திறனை எதம்பியுடல் மாற்றக்கூடும். உங்கள் பார்வை மங்கினால் அல்லது நிறங்கள் பார்க்கும் திறன் மாறினால், கூடிய சீக்கிரம் உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும்.
  - நீங்கள் இந்த மருந்தை இரண்டு மாதங்களுக்கு மேற்பட உட்கொண்டால், உங்கள் கண்களைப் பரிசோதிப்பதற்கு நீங்கள் ஒழுங்குசெய்ய வேண்டும்.

**காசநோய் மருந்து உட்கொள்வது பற்றிய குறிப்புகள்**

- ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் உங்கள் மருந்தை உட்கொள்ளவும். எடுத்துக்காட்டாக:
  - படுப்பதற்கு முன்னர்
  - காலையில் எழுந்தவுடன்
- வாராந்த மாத்திரைக் கலம் ஒன்றைப் பயன்படுத்தவும்
- நீங்கள் மாத்திரை உட்கொள்ளும் ஒவ்வொரு நாளையும் ஒரு நாட்காட்டியில் குறியிடவும்.
- உங்களுக்கு நினைவூட்டும்படி உங்கள் குடும்பத்தவர் அல்லது நண்பர் ஒருவரிடம் சொல்லி வைக்கவும்.
- நேரடிக் கவனிப்புச் சிகிச்சையைக் கருத்தில் கொள்ளவும்.

உங்கள் மருந்துகள் அல்லது காசநோய் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும். அல்லது ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையுடன் தொடர்புகொள்ளவும்: **416-338-7600**

மின்னஞ்சல்: **targettb@toronto.ca**
இணையத் தளம்: **www.toronto.ca/health/tb_prevention**

TORONTO Public Health



September 2011
PH1109SS212ETam